# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 6 ஆம் நாள், வெள்ளி கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

**நிகழ்ச்சி நிரல்**

**பொருள். 1**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் **2019–2020** (TURIP) கீழ் தார் சாலைகள் மற்றும் சிமெண்ட் கான்கிரீட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.**1000.00** இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்குப் பொருள் வைக்கப்படுகிறது.

**தொகுப்பு எண்.1**

| வ. எண் | பணிகள் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.**01**க்குட்பட்ட சாலை ரோடு சாலையில் நெடுத்தெரு சந்திப்பு முதல் மேலவாசல் வரை உள்ள சாலையில் மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சாலையை அகலப்படுத்தி புதுப்பிக்கும் பணி | 49.50 |
| 2 | வார்டு எண்.**03**க்குட்பட்ட இந்திராநகர், டிரைனெஜ் தெரு முதல் சக்திநகர் வரை உள்ள சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர்மூலம் தார் சாலை புதுப்பிக்கும் பணி | 33.25 |
| 3 | வார்டு எண்.**03**க்குட்பட்ட வசந்தநகர் சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 12.00 |
| 4 | வார்டு எண்.**04**க்குட்பட்ட சீனிவாசா நகர் மற்றும் குறுக்கு தெருகளில் உள்ள சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 33.75 |
| 5 | வார்டு எண்.**05**க்குட்பட்ட கீதாபுரம் பகுதியில் உள்ள சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 22.50 |
| 6 | வார்டு எண்.**05**க்குட்பட்ட அகிலாநகர் 2ம் குறுக்கு தெருகளில் உள்ள சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 6.75 |
| 7 | வார்டு எண்.**05**க்குட்பட்ட அகிலாநகர் **3**வது மெயின் சாலை மற்றும் குறுக்கு தெருகளில் உள்ள சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 31.50 |
| 8 | வார்டு எண்.**06**க்குட்பட்ட தாக்கூர் தெருவில் உள்ள சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 20.25 |
| 9 | வார்டு எண்.**06**க்குட்பட்ட AIBEA நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருகளில் உள்ள சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 40.50 |

| | | |
|---|---|---|
| 10 | வார்டு எண்.24&26க்குட்பட்ட காஜாபேட்டை மெயின் ரோடு, பாலக்கரை வேர் ஹவுஸ் சந்திப்பு முதல் சபரி மருத்துவமனை வரை உள்ள சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் புதுப்பிக்கும் பணி | 42.00 |
| 11 | வார்டு எண்.27க்குட்பட்ட செந்தண்ணீர்புரம், கண்ணகி தெரு மற்றும் திரு.வி.க தெருகளில் உள்ள சாலையினை மழைநீர் வடிகால் அமைத்து சிமெண்ட் கான்கீரீட் தளம் அமைக்கும் பணி | 25.00 |
| 12 | வார்டு எண்.14க்குட்பட்ட இ.பி ரோடு, கருவாட்டுபேட்டை முதல் கமலா தெரு வரை உள்ள சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் புதுப்பிக்கும் பணி மற்றும் பாதசாரிகளுக்கு நடைபாதைக்கு (Cover Slab) அமைக்கும் பணி | 183.00 |
| | **மொத்தம்** | **500.00** |
| | **தொகுப்பு எண்.2** | |
| 13 | வார்டு எண்.39க்குட்பட்ட செங்குறிச்சி சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 80.00 |
| 14 | வார்டு எண்.34க்குட்பட்ட ஏரிகரை சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 100.00 |
| 15 | வார்டு எண்.44க்குட்பட்ட பழைய தபால் நிலைய சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 35.00 |
| 16 | வார்டு எண்.46க்குட்பட்ட அண்ணாநகர் இணைப்பு சாலையினை(BC மட்டும்) மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 35.00 |
| 17 | வார்டு எண்.45க்குட்பட்ட கலைவானர் தெரு, இளங்கோ தெரு, அவ்வையார் தெரு, பாரதியார் தெரு 1ல் முதல் 7வது தெரு வரை உள்ள சாலையினை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 70.00 |
| 18 | வார்டு எண்.49க்குட்பட்ட ஹூதயாத் நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகால் மற்றும் சிமெண்ட் கான்கீரீட் தளம் அமைக்கும் பணி | 30.00 |
| 19 | வார்டு எண்.53க்குட்பட்ட கொடாப்பு மெயின் மற்றும் குறுக்குத் தெருக்களில் மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் பினிஷர் மூலம் சீரமைக்கும் பணி | 80.00 |
| 20 | வார்டு எண்.58க்குட்பட்ட வடிவேல் நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்து சிமெண்ட் கான்கீரீட் தளம் அமைக்கும் பணி | 70.00 |
| | **மொத்தம்** | **500.00** |
| | **ஆக மொத்தம்** | **1000.00** |

**அலுவலகக்குறிப்பு .**

1. மேற்கண்ட 20 பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிகளை 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.1000.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், அதற்கான மான்யம் வழங்க கோரியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கலாம்.
3. மான்யமாக அனுமதிக்கப்படும் தொகை நீங்கலாக மீதமுள்ள தொகையினை இம்மாநகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்,

**இ2/9036/2019(மையம்)**

**தீர்மானம் எண்.472 (பொருள்– 1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

இம்மாநகராட்சி 167.23 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள 65 வார்டுகளைக் கொண்ட நான்கு கோட்டங்களாக பிரிக்கப்பட்டு உள்ளது. இப்பகுதிகளில் உள்ள பிரதான சாலைகள் மற்றும் தெரு ஓரங்களில் உள்ள மின் விளக்குகளுக்கு இடையூறாக உள்ள மரக்கிளைகளை அகற்றக் கோரி பொதுமக்களிடமிருந்து புகார்கள் வரப்படுகிறது. இப்புகார்களின் அடிப்படையில் மின் விளக்குகளுக்கு இடையூறாக உள்ள மரக்கிளைகளை மின்ஒளி முழுவதும் சாலை மற்றும் தெருக்களில் பொது மக்களின் முழு பயன்பாட்டிற்கு கிடைக்கும் வகையில் அவ்வப்பொழுது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை துரிதமாக மேற்கொள்வதற்கு மரக்கிளைகளை அகற்றும் நவீன வகை இயந்திரம் -1 எண் வாங்க வேண்டியுள்ளது.

மேற்கண்ட விவரப்படி பணி மேற்கொள்ள நவீன வகை மரக்கிளைகள் அகற்றும் இயந்திரம்-1 எண் புதியது வாங்குவதற்கு உத்தேச செலவு ரூ.20.80 லட்சமாகும். மேலும் இவ்வியந்திரம் திடக்கழிவு மேலாண்மை பணியில் மாநகராட்சி பகுதிகளில் உள்ள மின்விளக்குகளுக்கு இடையூறாக உள்ள மரக்கிளைகளை அவ்வப்பொழுது அகற்றுவதற்கு அவசியம் தேவைப்படுவாதல், அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கிகொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.20.80 லட்சத்துக்கு நிர்வாக ஒப்புதல் வேண்டி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. செலவினத்தொகை ரூ.20.80 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 2019–20ம் ஆண்டு வருவாய் நிதி செலவினங்கள் கணக்கு தலைப்பு எண் 2305111ல் திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 2500.00 லட்சத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/5835/19(மையம்)**

**தீர்மானம் எண்.473 (பொருள்– 2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அரியமங்கலம் குப்பைக்கிடங்கில் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளிலிருந்து தரம் பிரித்து இயற்கை உரம் தயாரிப்பதற்கு தேவையான எந்திரங்கள் மற்றும் பிற உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்து, இயக்கி, மாற்றித்தரும் (Boot) முறையில் திட்டத்தினை மாநகராட்சிக்கு சொந்தமான நிலப்பரப்பில் 20 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் மேற்கொள்ள மாமன்றத் தீர்மானம் எண்.348 நாள்:22.11.2007ல் ஒப்புதல் அளித்துள்ளதன் பேரில் முதன்முறையாக தன்னார்வ நிறுவனங்களிடமிருந்து (BOOT) சொந்தமாக கட்டி இயக்கி திரும்ப ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மெசர்ஸ்.சிவசக்தி சுற்றுச்சூழல் மேம்பாட்டு அறக்கட்டளை, சேலம் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றத் தீர்மானம் எண்.56 நாள்:28.02.2008ல் ஏற்றக்கொள்ளப்பட்டு, 24.03.2008ல் ஒப்பந்தப்பத்திரம் கையெழுத்திடப்பட்டது.

மெசர்ஸ்.இன்டகிரேட்டட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் அண்ட் அர்பன் சர்வீசஸ் கம்பெனி (தமிழ்நாடு) பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தனது 07.10.2010ம் தேதிய கடிதத்தில் மேற்படி பணிக்கு, மெசர்ஸ்.சிவசக்தி சுற்றுச்சூழல் மேம்பாட்டு அறக்கட்டளை, சேலம் நிறுவனத்துடன் மாற்று ஒப்பந்தம் (Novation Agreement) 01.11.2008ல் செய்து கொண்டதன்படி பணியினை 01.04.2011ல் நடைமுறைபடுத்த உள்ளதாகவும் தெரிவித்துள்ளதை மாமன்றத் தீர்மானம் எண்.200 நாள்:27.12.2010ல் ஒப்புதல் அளித்துள்ளது.

மெசர்ஸ்.இன்டகிரேட்டட் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் அண்ட் அர்பன் சர்வீசஸ் கம்பெனி(தமிழ்நாடு) பிரைவேட் லிமிடெட் நிறுவனம் IL&FS, டெல்லி நிறுவனத்துடன் 01.03.2015

முதல் இணைக்கப்பட்டு, திடக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் பணி மெசர்ஸ். IL&FS, டெல்லி நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும் என தெரிவித்துள்ளனர்.

மெசர்ஸ். IL&FS நிறுவனம் இம்மாநகராட்சியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி தினசரி 300 டன் திடக்கழிவுகளை 22.06.2018 முதல் பெறாததால், இம்மாநகராட்சி 02.08.2018ந் தேதிய அறிவிப்பு கடிதம் மற்றும், இரண்டாவது அறிவிப்பு கடிதம் 31.08.2018ந் தேதி மேற்கண்ட நிறுவனத்தாருக்கு திடக்கழிவுகளை பெறாதது குறித்து விளக்கம் கோரப்பட்டது. இதற்கு நிறுவனத்திடமிருந்து எவ்வித பதில் கடிதமும் பெறப்படவில்லை. மேலும் இம்மாநகராட்சி மூலம் மூன்றாவது அறிவிப்பு கடிதம் 10.06.2019ந் தேதி அனுப்பப்பட்டும், மெசர்ஸ். IL&FS நிறுவனத்திடமிருந்து எவ்வித பதில் கடிதமும் பெறப்படவில்லை. எனவே மேற்கண்ட நிறுவனத்தாருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஏன் ரத்து செய்ய கூடாது என விளக்கம் கேட்டு இறுதி அறிவிப்பு கடிதம் 01.08.2019ம் தேதி அனுப்பப்பட்டது. அதற்கு மெசர்ஸ். IL&FS, நிறுவனத்தார் தெரிவித்த பதில் கடிதத்தில் 10.07.2019ம் முதல் திடக்கழிவுகளை பெற்று உரம் தயாரிக்கும் பணி நடைபெறும் என்று தெரிவித்துள்ளனர். இது குறித்து மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வு செய்த போது, நிறுவனத்தின் வாகனங்கள் அனைத்தும் இயங்காத நிலையிலும், உரம் தயாரிக்க பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் அனைத்தும் இயங்காத நிலையில் உள்ளது கண்டறியப்பட்டது.

மேலும், ஏற்கனவே நிறுவனத்தாருக்கு வழங்கப்பட்ட திடக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படாததால் அப்பகுதி முழுவதும் திடக்கழிவுகள் தேக்கமடைந்துள்ளது. அரியமங்கலம் குப்பைக்கிடங்கை சுற்றி உள்ள அப்பகுதி மக்களிடமிருந்து சுகாதார கேடுகள் குறித்து குறைகள் வந்துகொண்டிருக்கிறது. மேலும் அரியமங்கலம் கலப்புரக்கிடங்கில் தேக்கமடைந்துள்ள கழிவுகளினால் பொதுமக்களுக்கு ஏற்படும் சுகாதார சீர்கேடுகளை தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து சட்டப்பேரவையில் திருவரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் வினா எழுப்பப்பட்டு விவாதிக்கப்பட்டது,

இதனால், மாநகராட்சிக்கு பொதுமக்ககளிடம் அவப்பெயர் ஏற்படுகிறது. எனவே, இம்மாநகரபொதுமக்களின் நலன் கருதியும், திடக்கழிவுகளை 22.06.2018 முதல் பெறாததால் ஒப்பந்தவிதி வரிசை எண்.25 ன் படியும், மேற்கண்ட நிறுவனத்தாருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்வதற்கும், அரியமங்கலம் கலப்புரக்கிடங்கில் 7 ஏக்கர் நிலப்பரப்பில் மெசர்ஸ். IL&FS, நிறுவனத்தார் ஏற்படுத்தியுள்ள கட்டமைப்பு வசதிகள் மற்றும் இயந்திரங்களை, மெசர்ஸ். IL&FS, நிறுவனத்தாருடன் திருச்சி மாநகராட்சி செய்து கொண்ட ஒப்பந்த ஷரத்துகளிடன் படி, மாநகராட்சி கையகப்படுத்தி பயன்படுத்திக்கொள்ளவும் மற்றும் நிறுவனத்தார் செலுத்தியுள்ள முன் வைப்புத்தொகை ரூ.1.00 இலட்சத்தினை பறிமுதல் செய்யவும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1. அரியமங்கலம் குப்பைக்கிடங்கில் திடக்கழிவுகளிலிருந்து இயற்கை உரம் தயாரிக்கும் பணியினை மேற்கொண்டு வந்த மெசர்ஸ். IL&FS, நிறுவனத்தார் திடக்கழிவுகளை ஒப்பந்தத்தின் படி 22.06.2018 முதல் பெறாததால் ஒப்பந்தவிதி வரிசை எண்.25 ன் படி செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய அனுமதி அளிக்கலாம்.
2. மெசர்ஸ். IL&FS, நிறுவனத்தாருடன் திருச்சி மாநகராட்சி செய்து கொண்ட ஒப்பந்த ஷரத்துகளிடன் படி, அரியமங்கலம் கலப்புரக்கிடங்கில் 7 ஏக்கர் நிலப்பரப்பில் மெசர்ஸ். IL&FS, நிறுவனத்தார் ஏற்படுத்தியுள்ள கட்டமைப்பு வசதிகள் மற்றும் இயந்திரங்களை, மாநகராட்சி கையகப்படுத்தி பயன்படுத்திக்கொள்ளவும் மற்றும் மேற்கண்ட நிறுவனத்தார் செலுத்தியுள்ள முன் வைப்புத்தொகை ரூ.1.00 இலட்சத்தினை பறிமுதல் செய்யவும் அனுமதி அளிக்கலாம்.

**இ5/10773/2007(மையம்)**

**தீர்மானம் எண்.474 (பொருள்– 3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஸ்ரீரங்கம் கோட்டம் வார்டு எண்.**08** மற்றும் **09**க்குட்பட்ட பகுதிகளில் காவேரி கரையில் உள்ள படித்துறையில் **03.08.2019** அன்று ஆடி**–18** பெருக்கு விழா நடைபெற உள்ளதால், தில்லைநயாகம் படித்துறை, ஓடத்துறை, அய்யாளம்மன் படித்துறை, காந்தி படித்துறை, மேலசிந்தாமனி சுப்ரமணிய சாமி கோயில் படித்துறை ஆகிய படித்துறைகளில் தடுப்பு அமைத்தல், ஒளி –ஒலி அமைத்தல் மற்றும் மருத்துவ முகாம் நடைபெறுவதற்கு தேவையான மேடை அலங்காரம், தரை விரிப்பான், விளம்பர பலகை, டேபிள் சேர் ஆகியவற்றை வாடகை அடிப்படையில் வழங்கும் பணியினை மேற்கொள்வதற்கு ரூ.**1.40** இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டின் விலையை விட 0.05 சதவீதம் குறைவான விலைவீதத்தில், **1994** ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு **15**ன் கீழ் மெசர்ஸ். ஜி.ஆர் & சன்ஸ், திருச்சி ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ7/8707/2019 (மையம்)**

**தீர்மானம் எண்.475 (பொருள்– 4) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ.அபிஷேகபுரம் கோட்டம் 46, 30, 44, 57 & 43 வார்டுகளுக்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட பணியை திரு ஆர்.வெள்ளைச்சாமி, திருச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டதற்கு இறுதிப்பட்டியல் வழங்கப்பட்டு விட்டது. இப்பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார். கீழ்கண்டுள்ள பணியினைமேற்கொண்டமைக்கு தணிக்கையில் எவ்வித தணிக்கைத் தடையும் எழுப்பப்படவில்லை

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள வைப்புத் தொகை இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள் | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | |
| | | | | | தொ குப்பு | ப. எண் | வ . எண் |
| 1 | வார்டு எண்.**46**க்குட்பட்ட மாரிஸ் அவென்யு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்கள் கட்டுதல் **மதிப்பீடு ரூ.13.00 இலட்சம். இ2/6165/2011(மை)** | திரு ஆர்.வெள்ளைச் சாமி, திருச்சி. | 9.11.12 3% | 24,995/- | V | 44 | **597** |
| | | | 5.10.13 | 13,010/- | VI | 34 | **413** |
| 2 | வார்டு எண்.**30**க்குட்பட்ட கணேசபுரம் 7வது மற்றும் 8வது தெருக்களில் மழைநீர் வடிகால் கட்டுதல் **மதிப்பீடு ரூ.9.90 இலட்சம். இ2/3924/2012(மை)** | திரு ஆர்.வெள்ளைச் சாமி, திருச்சி. | 7.02.13 | 29,716/- | V | 61 | **839** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | வார்டு எண்.44க்குட்பட்ட மெக்டனால்ட்ஸ் சாலையில் சுற்றுலா அலுவலகம் அருகில் பழுதடைந்துள்ள சிறு பாலத்தினை திரும்பக் கட்டுதல் **மதிப்பீடு ரூ.5.00 இலட்சம். இ2/6656/2012(மை)** | திரு ஆர்.வெள்ளைச் சாமி, திருச்சி. | 28.10.13 | 14,567/- | VI | 36 | 432 |
| 4 | வார்டு எண்.57க்குட்பட்ட வீட்டு வசதி வாரிய குடியிருப்புச் சாலை (சோழராஜபுரம் சாலை சந்திப்பு முதல் Z-3 குடியிருப்பு வரை) பழுதடைந்துள்ள தார் சாலையை மைய சுடுகலவை இயந்திர உதவியுடன் பேவர் ஃபினிஷர் மூலம் மேம்படுத்துதல் **மதிப்பீடு ரூ.10.00 இலட்சம். இ2/7703/2013(மை)** | திரு ஆர்.வெள்ளைச் சாமி, திருச்சி. | 10.03.14 | 29,545/- | VI | 61 | 760 |
| 5 | மாநகராட்சி மைய அலுவலக வளாகத்தில் சுதந்திர தின விழா கொண்டாடும் வகையில் பந்தல் அமைப்புகள், பிளாஸ்டிக் இருக்கைகள், ஃபிளக்ஸ் போர்டுகள், மின் அலங்கார விளக்குகள் போன்றவைகளை வாடகை அடிப்படையில் அமைத்து கொடுக்கும் பணி **மதிப்பீடு ரூ.0.80 இலட்சம். இ2/6816/2013(மை)** | திரு ஆர்.வெள்ளைச் சாமி, திருச்சி. | 03.10.13 | 2,386/- | VI | 40 | 482 |
| 6 | வார்டு எண்.43க்குட்பட்ட கல்லுக்குழி முதல் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல் **மதிப்பீடு ரூ.12.25 இலட்சம். இ2/7611/2012(மை)** | திரு ஆர்.வெள்ளைச் சாமி, திருச்சி. | 12.02.13 3% | 35,361/- | V | 61 | 846 |
| **மொத்தம்** | | | | 1,49,580/- | | | |

ஒப்பந்ததாரர் திரு ஆர்.வெள்ளைச்சாமி, திருச்சி அவர்களிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்புத் தொகை ரூ.1,49,580/–ஐ ஒப்பந்ததாரர் அவர்களுக்கு காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டிலிருந்து திரும்ப வழங்க தனிஅலுவலர் அவர்களின்அனுமதிக்கு பொருள் வைக்கப் படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பிடித்தம் செய்துள்ள காப்புத் தொகை ரூ.1,49,580/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்கவும் ஒப்புதல் அளிக்கலாம்.

**இ2/1039/2019 (மையம்)**

**தீர்மானம் எண்.476 (பொருள்– 5) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பொன்மலைக் கோட்டம், வார்டு எண்.37க்குட்பட்ட சாமி நகர் பிரதான சாலைகள் மற்றும் குறுக்குத் தெருக்கள் மண் சாலையாக இருப்பதால், பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகுந்த இடையூறாக இருந்து வருவதால், தார்சாலை அமைத்து தருமாறு பொதுமக்களிடமிருந்து அவ்வப்போது கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளது. பொதுமக்களின்

நலன் கருதி மேற்படி மண்சாலையில் மைய சுடு கலவை பேவர் இயந்திரம் மூலம் புதிதாக தார் தளம் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு, ரூ.**30.80** லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.**30.80** லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
2. 2019–20ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் **புதிதாக தார்சாலை அமைத்தல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (3114) மாநகராட்சி நிதி ரூ.300.00 லட்சம் (3114)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து இப்பணிக்கான நிதியினை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண் : இ1/7759/2019(மையம்)**

**தீர்மானம் எண்.477 (பொருள்–6 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, ஆணையர் அவர்களின் ஒப்புதலினை தொடர்ந்து, அலுவலகப் பணிகளை மேற்கொள்ள இருக்கை எழுத்தர் மற்றும் அலுவலர்களுக்கு தேவையான கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் ஸ்கேனர்களுக்கான விலைப்புள்ளி Gem இணையதளம் வாயிலாக பெறப்பட்ட விவரம் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| Sl.No | Description | Rate (Rs) | Quantity | Total Amount (Rs) |
|---|---|---|---|---|
| 1 | HP Desktop (core i7,8gb,1000gb HDD,18.5display, 3yrs warrenty) | 75,850/- | 32 | 24,27,200 |
| 2 | Canon LBP 6030b Printer | 7,880/- | 5 | 39,400 |
| 3 | Canon MF 261D Printer | 17,456/- | 3 | 52,368 |
| 4 | Canon LBP 8780X A3 size Printer | 1,16,100/- | 3 | 3,48,300 |
| 5 | Epson DS 6500 Scanner | 45,892 | 2 | 91,784 |
| | **Grand Total** | | | **29,59,052** |

பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள முந்தைய DGS&D தற்போதைய வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் GEM **(Government E-Market Place)** இணையதளத்தில் **UTIS** கணினி கையாளுநர் அவர்களின் குறிப்பின்படி அமையப்பெற்ற கணினி மற்றும் அலுவலக தேவைக்கான பிரிண்டர்கள் மற்றும் ஸ்கேனர்கள் விலைப்புள்ளி பெறப்பட்டதில் ஆகும் செலவினம் (வரிகள் உட்பட) ரூ.**29,59,052/–** ஆகிறது. இச்செலவினத்தை **2019 – 2020**ம் ஆண்டிற்கான கணினி இயக்குவதற்கான செலவின தலைப்பின் கீழ் மேற்கொள்ளலாம்.

மேலும், உள்ளூர் நிறுவனமான மெசர்ஸ்.டோட்டல் சொலியூசன்ஸ் நிறுவனமானது GEM-ல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, முந்தைய DGS&D தற்போதைய வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் GEM **(Government E-Market Place)** இணையதளத்தில், தேவைப்பட்டியல் மற்றும் கொள்முதல் ஆணை (PO) பதிவேற்றம் செய்து மெசர்ஸ்.டோட்டல் சொலியூசன்ஸ் நிறுவனம் மூலம் கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் ஸ்கேனர்கள் ஆகிய உபகரணங்கள் பெற்றுக்கொள்ளலாம். தேவைபட்டியலின்படி ஆகும் செலவினம் ரூ.**29,59,052/–**க்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:–</u>**

1. புதிய கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் ஸ்கேனர்கள் வாங்கிக்கொள்வதற்கான செலவினத் தொகை **ரூ.29,59,052/–**க்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.

2. 2019–2020ம் ஆண்டின் வரவு, செலவுத் திட்டத்தில் செலவின தலைப்பு எண். 2026ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ65.00 இலட்சத்திலிருந்து இச்செலவினத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

3. GEM விலை விகிதத்தில் மெசர்ஸ். டோட்டல் சொலியூசன்ஸ், திருச்சி நிறுவனத்தாரிடம் கணினிகள், பிரிண்டர்கள் மற்றும் ஸ்கேனர்கள் வாங்கிக்கொள்வதற்கும், அதற்கான பட்டியல் தொகை அந்நிறுவனத்தாருக்கு வழங்குவதற்கும் அனுமதி அளிக்கலாம்.

**(சி5/2155/2019(மையம்)**

**தீர்மானம் எண்.478 (பொருள்–7 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், கீழ்கண்டுள்ள பணியினை கல்விநிதி 2019–20ன் கீழ் மேற்கொள்ள, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.129/2019–2020ன் 16.07.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி உறைகள் பிரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் (திருவாளர்கள்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| | கல்விநிதி – 2019–20 | | |
| 1 | பொன்மலைக்கோட்டம் வார்டு எண்.47 மேட்டுத் தெரு மாநகராட்சி நடுநிலைப் பள்ளி சமையறைக் கூடம், இருப்பு அறை மற்றும் ஒருங்கிணைந்த குழுந்தைகள் வளர்ச்சி மையம், நியாயவிலைக் கடை ஆகியவை புதிதாக கட்டும் பணி மேற்கொள்ளுதல். மதிப்பீடு ரூ.37.75 லட்சம். | **1. திரு. R. ஜேக்கப், 5.02 % அதிகம். (0.05 % குறைவு. பேச்சுவார்த்தைக்கு பின் )**<br>2. திரு. C. கணேசன், 6.08 % அதிகம். | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் திரு.R. ஜேக்கப், ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டை காட்டிலும் 5.02% அதிகமான ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்தாலும், மேற்படி ஒப்பந்தக்காரரின் 18.07.2019ம் தேதியிட்ட கடிதத்தில், மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05% குறைவான விலை வீதத்தில் பணியினை செய்து தருவதாக கூறியுள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகளை பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்கலாம்.

**(கோப்பு எண்.இ1/4402/2019(மை))**

**தீர்மானம் எண்.479 (பொருள்–8 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்க்காணும் ஒப்பந்ததாரரால் பணிகள் செய்து முடிக்கப்பெற்று, பட்டியல் தொகைகள் வழங்கப்பட்டு விட்டது.

மேற்கண்ட பணிகளுக்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ள காப்பு தொகைகளை திரும்ப வழங்குமாறு ஒப்பந்ததாரர் கோரியுள்ளார். இப்பணிகளுக்கு தணிக்கை தடை ஏதும் எழுப்பப்படவில்லை.

மேற்கண்ட ஒப்பந்தாரரிடம் பிடித்தம் செய்யப்பட்ட கீழ்க்கண்ட தொகைகள் இம்மாநகராட்சி காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடுகளில் கீழ்க்கண்டவாறு பதியப்பட்டுள்ளது.

| வ எண் | பணியின் விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட நாள். | பிடித்தம் செய்யப்பட்ட தொகை (ரூபாயில்) | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் பக்க எண் & வரிசை எண் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 8 |
| 1 | திருவாணைக்கோவில் – பெரியார் நகர் பகுதியில் மேம்பாலம் கட்டும் பணிக்காக மாற்றம் செய்யப்படும் புதைவடிகால் இணைப்பிற்காக 600 மி.மீ விட்டமுள்ள இரும்பு குழாய் விநியோகம் செய்து பதித்து கொடுத்தல் மற்றும் வெட்டப்படும் சாலைகளை புதுப்பித்தல் இ4/1776/2014/மையம் | திரு.எம்.நாகராஜன்<br>ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 298/2013–14 வ.எண்.3, நாள்.27.02.2011<br>மதிப்பீடு ரூ.9.10 இலட்சம் | 17.10.14 | 28,774 | தொகுப்பு – 7<br>பக்கம் எண் – 63<br>வ.எண் – 872 |
| 2 | வார்டு எண்.9, பழைய கரூர் சாலையில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணி<br>இ4/8338/2010/மையம் | திரு.எம்.நாகராஜன் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 134/2010–11 வ.எண்.1 நாள்.21.12.10<br>மதிப்பீடு ரூ.3.60 இலட்சம் | EMD DD.No. 874431 dt.21.12.10 SBI | 3600 | தொகுப்பு – 4<br>பக்கம் எண் – 22<br>வ.எண் – 296 |
| | | | 30.03.11 | 914 | தொகுப்பு – 4<br>பக்கம் எண் – 49<br>வ.எண் – 687 |
| | | | 24.10.11 | 2,352 | தொகுப்பு – 4<br>பக்கம் எண் – 93<br>வ.எண் –591 |
| 3 | வார்டு எண்.8, சஞ்சீவி நகர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு வர்ணம் பூசும் பணி<br>இ4/919/2014/மையம் | திரு.எம்.நாகராஜன் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 300/2013–14 வ.எண்.2 நாள்.27.02.13 மதிப்பீடு ரூ.1.55 இலட்சம் | 30.04.14 | 6,193 | தொகுப்பு – 7<br>பக்கம் எண் – 60<br>வ.எண் –820 |
| 4 | திருவானைக்கோவில்– பெரியார் நகர் பகுதியில் மேம்பாலம் கட்டும் பணிக்காக மாற்றம் செய்யப்படும் புதைவடிகால் இணைப்பிற்காக 600 மி.மீ விட்டமுள்ள இரும்பு குழாய் விநியோகம் செய்து பதித்து கொடுத்தல் மற்றும் வெட்டப்படும் சாலைகளை புதுப்பித்தல் இ4/2037/2014/மையம் | திரு.எம்.நாகராஜன்<br>ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.298/2013–14 வ.எண்.4 நாள்.27.02.13<br>மதிப்பீடு ரூ.9.30 இலட்சம் | 17.10.14 | 26,608 | தொகுப்பு – 7<br>பக்கம் எண் – 70<br>வ.எண் – 945 |
| 5 | திருவானைக்கோவில்– பெரியார் நகர் பகுதியில் மேம்பாலம் கட்டும் பணிக்காக மாற்றம் செய்யப்படும் புதைவடிகால் இணைப்பு குழாய் மாற்றுவதற்கு மண்சரிவு தடுப்பான் | திரு.எம்.நாகராஜன்<br>ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.298/2013–14 வ.எண்.2 நாள்.27.02.13 மதிப்பீடு ரூ.9.90 இலட்சம் | 23.10.14 | 16,100 | தொகுப்பு – 7<br>பக்கம் எண் – 64<br>வ.எண் –879 |
| | | | 15.03.16 | 14,559 | தொகுப்பு – 8<br>பக்கம் எண் –101<br>வ.எண் –331 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமைத்தல் இ4/2038/2014/மையம் | | | | |
| 6 | வார்டு எண்.8,9,10,11, 12, 13, 16, 17, 18 ஆகிய வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் கைபம்புடன் கூடிய ஆழ்துளை கிணறு அமைத்து கொடுக்கும் பணி இ4/1909/2014/மையம் | திரு.எம்.நாகராஜன் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.277/2013–14 வ.எண்.2 நாள்.18.02.14 மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் | 13.06.14 | 32,566 | தொகுப்பு – 7 பக்கம் எண் – 60 வ.எண் –826 |
| 7 | வார்டு எண்.14,15,19,20,21,22, 23, 24 மற்றும் 26க்குட்பட்ட பகுதிகளில் 18 எண்ணிக்கை ஆழ்துளை கிணற்றுடன் கூடிய அடிபம்பு அமைக்கும் பணி இ4/1517/2014/மையம் | திரு.எம்.நாகராஜன் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.278/2013–14 வ.எண்.6 நாள்.18.02.14 மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் | 06.08.14 | 26,897 | தொகுப்பு – 7 பக்கம் எண் –61 வ.எண் –840 |
| 8 | வார்டு எண்.7,25,27,28,29, 33, 61,62 மற்றும் 64 க்குட்பட்ட பகுதிகளில் 18 எண்ணிக்ளை ஆழ்துளை கிணற்றுடன் கூடிய அடிபம்பு அமைத்தல் இ4/1518/2014/மையம் | திரு.எம்.நாகராஜன் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.278/2013–14 வ.எண்.7 நாள்.18.02.14 மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் | 25.06.14 | 33,157 | தொகுப்பு – 7 பக்கம் எண் – 61 வ.எண் –831 |
| 9 | வார்டு எண்.15,21,24,27, 33 ஆகிய பகுதிகளில் 5 இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டாருடன் கூடிய பிவிசி தொட்டி அமைத்தல் இ4/1512/2014/மையம் | திரு.எம்.நாகராஜன் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.278/2013–14 வ.எண்.8 நாள்.18.02.14 மதிப்பீடு ரூ.6.60 இலட்சம் | 05.11.14 | 23,494 | தொகுப்பு – 7 பக்கம் எண் –64 வ.எண் –883 |
| 10 | திருவாணைக்கோவில் பெரியார் நகர் பகுதியில் மேம்பாலம் கட்டும் பணிக்கு இடையூறாக உள்ள புதைவடிகால் தொட்டிகளை சாலையின் ஓரத்தில் மாற்றியமைத்தல் இ4/2039/2014/மையம் | திரு.எம்.நாகராஜன் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.298/2013–14 வ.எண்.1 நாள்.27.02.14 மதிப்பீடு ரூ.9.80 இலட்சம் | 17.10.14 | 30,551 | தொகுப்பு – 7 பக்கம் எண் – 63 வ.எண் –873 |
| | **மொத்தம்** | | | **2,45,765** | |

மேற்கண்ட ஒப்பந்தாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை **ரூ.3600/–** + காப்பு தொகை ரூ.2,42,165/– = மொத்தம் **ரூ.2,45,765/–** ஐ காலங்கடந்த வைப்புத் தொகையிலிருந்து திரும்ப வழங்குவதற்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி கோரி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு வழங்கப்பட்ட பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை **ரூ.2,45,765/–**ஐ காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிலிருந்து (Lapsed Deposit Account) திரும்ப வழங்க ஒப்புதல் அளிக்கலாம்.

**இ4/9853/2018(மையம் )**

**தீர்மானம் எண்.480 (பொருள்–9 ) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், கீழ்கண்டுள்ள பணியினை பொதுநிதி 2019–20ன் கீழ் மேற்கொள்ள, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.241/2019–20ன் வாயிலாக 06.09.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் (திருவாளர்கள்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| | பொன்மலைக் கோட்டம் , பொது நிதி – 2019–20 | | |
| 1 | வார்டு எண்.63 மஞ்சத்திடல் குளம் தூர்வாரும் பணி, நடைமேடை, குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள், திறந்தவெளி உடற்பயிற்சி சாதனங்கள் மற்றும் மழை நீர் சேகரிப்பு அமைக்கும் பணி.<br><br>மதிப்பீட்டுத் தொகை ரூ.24.50 லட்சம். | 1. திரு. A. மணிகண்டன், 0.04 % குறைவு.<br><br>**2. திரு. M. பொன்னுசாமி, 1.13 % அதிகம்.** | நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதில், திரு. A. மணிகண்டன், ஒப்பந்தக்காரர் வழங்கியுள்ள மதிப்பீட்டைக் காட்டிலும் 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட பணிக்கு பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**(கோப்பு எண்.இ1/6408/2019(மை))**

**தீர்மானம் எண்.481 (பொருள்–10) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 11**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட 65 வார்டுகளிலும் டெங்கு காய்ச்சல் ஏற்படுவதற்கு காரணமான ஆதாரங்களை கண்டறிந்து தடுப்பு நடவடிக்கைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு தூய்மைப் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட பணியின் போது திடக்கழிவுகளை தேக்கம் இன்றி உடனுக்குடன் அப்புறப்படுத்தவும் சிறப்புபணி மேற்கொள்ளவும் கோட்டத்திற்கு ஒரு வாகனம் வீதம் நான்கு கோட்டங்களுக்கு 4 எண்ணிக்கை தனியார் கனரக டிப்பர் வாகனங்கள் அமர்த்திக் கொள்வது அத்தியாவசியமானது ஆகின்றது. எனவே 4 தனியார் டிப்பர் லாரிகள் 50 நாட்களுக்கு 12.07.2019 முதல் 30.08.2019 வரை, மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்ட வாகனங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்படும் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 2019–20ம் ஆண்டுக்கான வாடகை தொகை நிர்ணயம் செய்து வெளியிடப்பட்ட செயல்முறைகள் ந.க.எண்.13508/பி4/2019 நாள்.08.04.2019ன் படி 4 எண்ணிக்கை தனியார் கனரக டிப்பர் லாரிகள் தினசரி வாடகை அடிப்படையில் வட்டார போக்குவரத்து அலுவலர் மூலம் வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட தனியார் கனரக டிப்பர் வாகனங்களை, தொடர்ந்து 90 நாட்களுக்கு பயன்படுத்திக்கொள்ள நான்கு கோட்ட உதவி ஆணையர்களும் தங்களது கடித்தில் தெரிவித்துள்ளனர். எனவே தனியார் கனரக டிப்பர் வாகனங்களை, தொடர்ந்து 90 நாட்களுக்கு டெங்கு காய்ச்சல் ஒழிக்கும் தூய்மைப்பணிக்கு ஈடுபடுத்துவதால் கீழ்கண்ட விவரப்படியான உத்தேச செலவினத்தொகை ஏற்படும்.

**உத்தேச செலவினப்பட்டியல்**

| வ. எண் | உத்தேசமாக ஏற்படும் வாகன செலவு விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | 4 கனரக வாகனங்கள் (டிப்பர் லாரிகள்) ஓட்டுநர் படி மற்றும் எரிபொருள் உட்பட 90 நாட்களுக்கு (31.08.2019 – 28.11.2019). | ரூ.17,80,000/– |

மேற்கண்ட விவரப்படி டெங்கு சிறப்பு பணி மேற்கொள்ள் 4 எண்ணிக்கைகள் தனியார் டிப்பர் வாகனங்களை 31.08.19 முதல் 90 நாட்களுக்கு வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொள்ளவும், இதற்கான செலவினத் தொகை ரூ.17.80 லட்சத்திற்கும் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதிக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக் குறிப்பு :**

1. இம்மாநகராட்சியில் டெங்கு சிறப்பு பணி மேற்கொள்ள் 4 எண்ணிக்கைகள் தனியார் கனரக டிப்பர் வாகனங்களை, 90 நாட்களுக்கு தொடர்ந்து வாடகைக்கு அமர்த்தி பணி மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.17.80 லட்சத்திற்கு அனுமதி அளிக்கலாம்.
2. 2019–20ம் ஆண்டு வரவு – செலவு திட்ட பொது நிதிக் கணக்குத் தலைப்பு எண் 2305111ல் (திடக்கழிவு மேலாண்மை பராமரிப்புப் பணிகள் – மனித ஆற்றல் உட்பட) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2500.00 இலட்சத்திலிருந்து மேற்கண்ட செலவினத்தினை மேற்கொள்ளலாம்.

**(கோப்பு எண்.இ5/ 6852 /2019(மை)**

**தீர்மானம் எண்.482 (பொருள்–12) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) – ந. இரவிச்சந்திரன்,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையர்,**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.**